**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.293** **நாள்: 15.07.2026**

**மத்திய வட்டாரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்களும், தெற்கு வட்டாரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்களும் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127க்குட்பட்ட காலி இடத்தில் தாய்சா-1 மற்றும் தாய்சா-2 ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைபாதை, சாலை மையத்தடுப்பு மற்றும் பூங்கா மேம்பாட்டுப் பணிகள், மேற்கு நடேசன் நகர் மற்றும் காளியம்மன் கோயில் தெருவில் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்புச் சுவர் உயர்த்திக் கட்டும் பணி மற்றும் தூர்வாரும் பணிகள், காளியம்மன் கோயில் தெருவில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள் ஆகியவற்றை இன்று (15.07.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், இன்று (15.07.2026) ஆலந்தூர் மண்டலம், வார்டு-160க்குட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த மண்டல அலுவலகம் மற்றும் வட்டார துணை ஆணையாளர் அலுவலகக் கட்டடப் பணிகள் மற்றும் வார்டு-158, மவுண்ட் பூந்தமல்லி சாலையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணிகளால் சேதமடைந்த நெடுஞ்சாலைத்துறையின் மழைநீர் வடிகாலினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, சேதமடைந்த பகுதியில் குழாய்களைப் பதித்து தற்காலிக இணைப்பு ஒன்றை அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**